IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

STC NO.530/2025

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SHANMUGAM |
| FATHER'S NAME | : | SUBRAMANI |
| VILLAGE | : | KALANGKUPPAM |
| OCCUPATION | : | HC |
| AGE | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 4th day of MARCH 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜரில்லை. குவிமுச 317 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 20.09.2025 ம் தேதி காலை 6.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு சிவசந்திரன், தலைமை காவலர் ரஞ்சித் மற்றும் நானும் மதுவிலக்கு தொடர்பாக காட்பாடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கிறிஸ்டியான்பேட்டை பேருந்து நிறுத்திற்கு அருகில் சென்ற போது ஆஜர் எதிரி சந்தேகப்படும்படியாக கையில் ஒரு வெள்ளை நிற பாலித்தின் கோனிப்பையுடன் நின்று கொண்டிருந்தார். அவரை விசாரித்த போதுTN IMFL 180 ML அளவு கொண்ட EXPRESS BRANDY –26 மதுபாட்டில்கள் கேனிப்பையில் வைத்திருந்தார்.அதை உதவி ஆய்வாளர் எதிரியை காரணம் கூறி கைது செய்து எதிரி வைத்திருந்த TN IMFL 180 ML அளவு கொண்ட EXPRESS BRANDY –26 மதுபாட்டில்கள் மற்றும் வெள்ளை நிற பாலத்தீன் கோனிப்பையும் கைப்பற்றுதல் மகசரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து பாரவசம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவ இடத்திற்கு சிவில் உடையில் சென்றேன் என்றால் சரிதான். என்னுடன் காவலர் ரஞ்சித் மற்றும் உதவி ஆய்வாளர் சிவசந்திரன் ஆகியோருடன் சென்றோம். நானும் உதவி ஆய்வாளர் ஒரு இருசக்கர வாகனத்திலும் காவலர் ரஞ்சித் இன்னொரு இருசக்கர வாகனத்திலும் செனறோம். சம்பவம் இடம் போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். பொதுநபர்கள் யாரையும் சாட்சியமாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எந்த டாஸ்மாக்கில் வாங்கபட்டது என்றும் அந்த டாஸ்மாக் ஊழியர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஓடிய நபரை பிடித்து

விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடக்கவில்லை என்றும் உண்மையில் நடந்திருந்தால் ஓடிய நபரை விசாரித்து இருப்போம் என்றும் டாஸ்மாக் ஊழியர்களை விசாரித்து இருப்போம் என்றால் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. மேல் அதிகாரி உத்தரவின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 04.03.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.